| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 04.02.2026 | |
| CC No.464/2025 | |
| சாட்சி : PW3 | |
| பெயர் : திரு.பிரவீன்குமார் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. கணேசன் | தொழில் : டிரைவர் |
| கிராமம் : சொரியம்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : மருங்காபுரி | வயது : 25/2026 |
| ( எதிரி ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

------------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். சொரியம்பட்டி பைபாஸ் பகுதியில் எங்களது ஜியோ டவர் வைத்துள்ளார்கள். நேருஜி என்பவர் தான் அதை மேற்பார்வை பார்த்து வருகிறார். ஆஜர் எதிரியை தெரியும்.08.08.2021 அன்று இரவு 09.30 –10.30 மணியளவில் நான் கைக்காட்டியில் வந்து கொண்டிருந்த போது எங்களது இடத்தில் உள்ள ஜியோ டவரில் மூன்று நபர்கள் திருட வந்துள்ளதாக எனக்கு தகவல் கிடைத்து அதனால் உடனடியாக அங்கு சென்று பார்த்தேன். நான் வரும்போது நேருஜி (அ.சா.1) தகவல் சொன்னேன். நான் சம்பவ இடத்தில் வந்து பார்த்த போது ஆஜர் எதிரியுடன் மற்றொரு நபரும் இருந்தார். இவர்கள் தான் ஜியோ டவரில் திருடவந்தவர்கள் என தெரியவந்தது. பின்னர் நேருஜி ஊர்க்காரர்களுடன் சேர்ந்து காவல்நிலையத்திற்கு எதிரிகளை அழைத்து சென்றார். இடத்தின் உரிமையாளர் என்ற வகையில் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

2. நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.sc Hotel Management படித்துள்ளேன். சம்பவ தினத்தன்று சம்பவ இடத்திலிருந்து எதிரிகள் பின்னாடி காவல்நிலையத்திற்கு நான் எனது வாகனத்தில் சென்றேன். எங்கள் ஊர்க்காரர்கள் என்னுடன் 4, 5 நபர்கள் வந்தார்கள். வளநாடு

காவல்நிலையத்தில் போலீசார் என்னை விசாரித்து என்னிடம், எதிரிகளிடமும் கையெழுத்து வாங்கிகொண்டார்கள். இரவு சுமார் 10.00 மணியளவில் எனக்கு போன் செய்தார்கள், அதற்கு எத்தனை மணிநேரத்திற்கு முன்பாக சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. நான் கையெழுத்து செய்த பேப்பரில் எங்கள் ஊரில் டவர் உள்ள இடம் பற்றியும் டவரிலிருந்து என்னென்ன பொருளை திருடினார்கள் என்ற விபரத்தையும் எதிரிகளின் பெயர், விலாசம் ஆகிய விபரமும் எழுதப்பட்டிருந்தது. வளநாடு போலீசார் எழுதினார்கள். எந்த போலீசார் என்று எனக்கு ஞாபகமில்லை. எதிரிகளிடம் தனித்தனியாக வாக்குமூலம் எழுதி கையெழுத்து வாங்கினார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நேருஜி அந்த பகுதி டவருக்கு பொறுப்பாளர் என்றால் சரிதான். எதிரிகள் அதில் வேலை பார்த்தவர்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எதிரிகள் அந்த நிறுவனத்தில் வேலை பார்த்தார்கள் என்றும், அவருக்கு சம்பள பாக்கி உள்ளது என்றும் அதை கொடுக்காமல் எதிரிகள் மீது அ.சா.1 மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் அதற்கு ஆதாரவாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar, B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.